விலை சதம் 10

# சத்தியம்

"எங்கள் உழைப்பெல்லாம் இந்த நாட்டில் உள்ளவர்க்கே"

ஆணை 1 | [ஒக்டோபர் 1 1970] | பணி 3

குந்தி யிருந்து பஸ்ஸில் போகையில்
தொங்கி நிற்கும் கிழங்களை நோக்கையில்
குத்தல் நெஞ்சை அடிக்கடி குடையுதே
இருப்போர் நெஞ்சில் இவையெழல் நியாயமே

இருப்பை உதறி விட்டெழ முந்துவோம்
இருப்பை உதறி விட்டெழ முந்தினல்
இருப்பதெல்லாம் எமக்கின்பப் பயணமே
இப்போ குத்தல் இருப்பவர்க் காய்விடும்

— காளிதாசன்

# தமிழரசுக்கட்சியும் சிங்களமும்

— செய்தி. என் கே மகாலிங்கம் —

ஒரு கட்சி வீழ்ச்சியுறும்போது காணக்கூடிய முக்கிய அம்சங்களில் ஒன்று அதில் காணப்படும் முரண்பாடுகளும் அதனடிப்படையாகத் தோன்றும் குழப்பங்களுமே. இதுவரலாற்றுண்மை. தமிழரசுக்கட்சியினருடைய முரண்பாடான கொள்கைகளும் குழப்பங்களும் இதைத்தான் தெளிவாக என்றுமில்லாதவகையில் பிரதிபலிக்கின்றன. தமிழர்கள் சிங்களம் படிக்கவேண்டுமா வேண்டாமா என்ற கொள்கையைப் பொறுத்தமட்டில் தமிரசுக்கட்சியினரிடம் 'ஆரம்பகாலம் தொடக்கம் இன்றுவரை ஓர் பூரணமான தெளிவான திட்வட்டமான கொள்கை இருந்ததே கிடையாது. சந்தர்ப்பத்திற்கேற்றவாறு தங்களிடம் ஏதோ கொள்கை ஒன்று திட்டவட்டமாக இருப்பது மாதிரிக் காட்டிக்கொண்டார்களேயொழிய உண்மையில் அவர்களிடம் அப்படி ஒன்றுமே இல்லை என்பதை தமிழரசுக்கட்சியினருடைய முரண்பட்ட கொளகைகளை ஆராய்ந்தால் தெளிவாக விளங்கும்.

தமிழர்கள் சமதையாக உரிமையுடன் வாழவேண்டும் என்பது உண்மை. அதைப்பெறுவதற்குப் பாடுபடுவதும் அவசியம். இதை யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. ஆனல் அதற்காகப் பாடுபட்டு உழைக்கும் ஓர் கட்சி நேரான சில கொள்கைகளைக் கடைப்பிடிப்பது அவசியம். இந்த அடிப்படையில்தான் தமிழரசுக்கட்சியினர் 1956-ல் போது முரண்பாடு எழுவது தவிர்க்க முடியாது. மொழிக்கொள்கையில் அத்தகைய முரண்பாடுகள் மலிந்துகிடப்பதைக் காணலாம்.

1956-ல் தனிச்சிங்களச சட்டத்தைத் தமிழரசுக்கட்சி எதிர்த்தது.

ஆனல் அதே கட்சி பண்டாரநாயக்காவுடன் தமிழ்மொழி விசேஷ உரிமைச் சட்டம் என்ற ஒன்றிற்காக ஒப்பந்தம் செய்து கொண்டது, தனிச்சிங்களச் சட்டத்தின் அடிப்படையை மறுக்காமலேயே.

தனிச் சிங்களச் சட்டத்தின் அடிப்படையில் ஏற்பட்ட அவ்வொப்பந்தம் அரசாங்க சேவையிலுள்ளவர்கள் சிங்களத்தில் தேர்ச்சிபெற்றவர்களாக இருக்க வேண்டுமென்பதை மறுப்பதாய் இல்லை. அப்படியென்ருல் தமிழ் அரசாங்க ஊழியர்களும் சிங்களம் படிக்கத்தான் வேண்டும்.

அப்படியிருக்கையில் ஒப்பந்தம் செய்துகொண்ட தமிழரசுக்கட்சி அதே காலத்தில் சிங்கள ஸ்ரீ அழிப்பியக்கம், அரசாங்க சேவையாளர் சிங்களம் படிக்கக்கூடாது என்ற பிரசாரம் ஆகியவற்றில் முன்னுக்குப்பின் முரண்பட்டவிதத்தில் ஈடுபட்டது.

பின்பு ஐக்கியதேசியக்கட்சியுடனும் கூட்டுச்சேர்ந்தகாலத்தில் அது தனிச் சிங்களச் சட்டத்தின் அடிப்படையை ஏற்றுக்கொண்டது.

வேண்டுமென்றும், ஆனல் அவர்களுக்குச் சிறிது கருணை காட்டவேண்டுமென்றும் கூறும் தமிழரசுக்கட்சி எதிர்காலத்தில் அரசாங்கத்தில் சேரும் தமிழர்கள் தமிழ ஊழியர்களுக்குக் கருணை காட்டுவதாகவோ, அவர்களும் சிங்களத்தில் தேர்ச்சிபெறுவதற்கு வசதியளிக்க விரும்புவதாகவோ இல்லை. சிங்களமும் ஒரு பாடமாகத் தமிழ்ப்பள்ளிக்கூடங்களில் படிப்பிக்கக்கூடாது என்ற பிரசாரம் எதிர்காலத்தில் அரசாங்கத்தில் சேரக்கூடிய தமிழ் ஊழியர்களுக்குச் சிங்களத்தில் தேர்ச்சி பெறுவதற்குரிய வசதிகளையும் கருணையையும் இப்போதே கொடுக்ககூடாது என்ற பிரசாரமாகத் தானே அர்த்தமெடுக்கிறது? ஆனல் அத்தகைய பச்சையான முரண்பாட்டைக்கூடத் தமிழரசுக்கட்சி அறியாததாக இருக்கிறது.

இத்தகைய முரண்பாடுகள்தான் தமிழரசுக்கட்சியின் இன்றைய "மொழிக் கொள்கை"யாகக் காட்சிதருகின்றது.

அண்மையில் திரு. செல்வநாயகம் பரி. யோவான் கல்லூரி அதிபருக்கு அனுப்பிய தந்தியில் அங்கு சிங்களம் படிப்பிக்கவேண்டாம் என்று அவரைக் கேட்டுள்ளார். அதற்கான காரணம் யாது என்று ஒருவருக்கும் விளங்கவில்லை. பரி. யோவான கல்லூரியில் படிக்கும் பிள்ளைகள் எவருமே அரசாங்க உத்தியோகத்தில் சேரமாட்டார் விட்டதா? அதே குழப்பந்தானு தமிழரசுக்கட்சியின் கொள்கையாகவும் இருக்கிறது?

இன்னும் சிறிது ஆராய்ந்தால் இந்தக் கொளகைக் குழம்பலினதும் கோளாறினதும் வேடிக்கைப் போக்கு இன்னும் ஆழமானது என்பதும் தெரிய வரும்.

அரசாங்கத் தமிழ்ப்பாடசாலைகளில் சிங்களம் படிப்பிக்கக்கூடாது என்று கூறும் தமிழரசுக்கட்சி தனியார்துறைப் பாடசாலைகளிலும் ரியூட்டரிகளிலும் சிங்களம் படிப்பிக்கப்பட்டு வருவதைத் தடுக்க விரும்புவதாகவும் இல்லை. அதைப்பற்றித் தெரிந்திருப்பதாகக் காட்டிக் கொள்வதில்லை. அப்படியானல் பணம் கொடுத்துப் படிக்கும் ரியூட்டரிகளிலும் தனியார் துறைப் பாடசாலைகளிலும் சிங்களம் படிக்கலாம். இலவசமாகப் படிப்பிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைகளில்மட்டும் படிப்பிக்கக்கூடாது என்று தமிழரசுக்கட்சி கருதுகிறதா? அப்படியானல் பணங் கொடுத்துப் படிக்கக்கூடியவர்கள் சிங்களம் படித்து உத்தியோகமும் பெறலாம், ஏழைகள் அதைப் படிக்கக்கூடாது உத்தியோகமும் பெறக்கூடாது என்று தமிழரசுக்கட்சி தன்னையறியாமலேயே நினைத்துக்கொள்கிறதா? அப்படியும் சொல்ல இடமுண்டு. தமிழரசுக் கட்சித் தலைவர்களின் பிள்ளைகளும் சொந்தக்காரர்களும் தாராளமாகச் சிங்களம் படித்து வெளிநாடுகளிலும் அரசாங்கத் தூதுவராலயங்களில் வேலை பார்க்கிருர்கள் என்பதைப் பார்க்கும்போது அப்படியும் அர்த்தமெடுப்பதில் என்ன தவறிருக்கிறது?

# கொள்கையா? கொள்கைக் குழப்பமா?

திரு. எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கா கொண்டுவந்த தனிச்சிங்கள மசோதாவை எதிர்த்தனர். அது நியாயமானதுதான். ஆனல் தமிழர்களுடைய மொழியைப் பாதுகாக்க உழைப்பதாகக் கூறிய தமிழரசுக்கட்சி நெற்காணி மசோதா, பாடசாலை தேசியமயம், துறைமுகம் தேசியமயம், பஸ் தேசியமயம், வெளிநாட்டுத் தளங்களை இலங்கையர் மயமாக்குதல் ஆகியவற்றைத் தீவிரமாக எதிர்த்தது. அதற்கு எந்த விதமான தர்க்கநியாயங்களையும் காட்டியதாகவும் இல்லை. இங்குதான் அவர்களிடம் திட்டவட்டமான தெளிவான, தூரதிருஷ்டியுள்ள கொள்கைகள் இல்லை என்பதற்கு எடுத்துக்காட்டுக்கள் கிடைக்கின்றன. மொழிரீதியில் மட்டுமல்ல' பொருளாதாரரீதியிலும் சுதேசமக்கள் ரீதியிலும் தமிழர்கள் உரிமையுடனும் வாழவேண்டும் என்பவற்றை தமிழரசுக் கட்சி அறிந்ததாகத் தெரியவில்லை.

இவை தமிழரசுக்கட்சியின் திட்டமற்ற, தெளிவற்ற கொள்கைகளுக்குச் சான்றுகள். தமிழரசுக்கட்சியின் முரண்பட்ட கொள்கைகளுக்கும் செயல்களுக்கும் காரணமாக அவர்களுடைய மொழிக் கொள்கை இருக்கிறது. தெளிவில்லாத கூட்டுச்சேர்ந்து அரசாங்கம் நடத்தியகாலத்தில் சிங்களத் தேர்ச்சியில்லாத காரணத்தால் தமிழ் அரசாங்க ஊழியர்கள் கஷ்டத்துக்குள்ளான காலத்தில் அவர்களுக்காகத் தமிழரசுக்கட்சி உதவ முன்வரவில்லை. மாருக சிங்களம் படிக்கவேண்டாம் என்று தாங்கள் சொல்லவில்லையே என்று கூறுமளவுக்குக்கூட தமிழ் ஊழியர்களுக்குத் துரோகம் செய்யத் தயாராய் இருந்தது.

இன்று பொதுத்துறை இலாகா மந்திரிகுத் தமிழரசுக்கட்சி, இதுவரை சிங்களத் தேர்தலில் சித்தியெய்யாத தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு இன்னும் சிறிதுகாலம் கருணைகாட்ட வேண்டுமென்று கடிதம் எழுதுகிறது. அப்படியென்ருல் அது தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிங்களம் படித்துத்தான் ஆகவேண்டும் என்பதைத் திரும்பவும் ஏற்றுக்கொள்கிறது.

ஆனல் அதேவேளையில் சிங்கள ஆசிரியர்கள் தமிழ்ப்பகுதிகளில் சிங்களம் படிப்பிக்க நியமிக்கப்படக்கூடாது என்றும் பிரசாரம் செய்கிறது. அரசாங்க ஊழியர்களாக இருக்கும் தமிழர்கள் சிங்களம் படித்துத்தான் ஆகள், சேரக்கூடாது என்று திரு. செல்வநாயகம் கருதுகிருரா?

"தமிழர்கள் இனிமேல் அரசாங்க உத்தியோகத்தில் சேரக்கூடாது (காரணம் சேர்ந்தால் சிங்களம் படிக்க வேண்டும்). அரசாங்க உத்தியோகத்தர்களாக உள்ள தமிழர்கள் உத்தியோகத்தைத் துறந்துவிட்டு வாருங்கள்" என்று நாட்டிலே பிரசாரம் செய்து கொண்டு தமிப்பாடசாலைப் பிள்ளைகளைச் சிங்களம் படிக்காதீர்கள், படிக்கக்கூடாது என்று சொன்னல் அதில் ஒருவேளை நியாயம் இருக்கலாம். ஆனல் ஐ. தேசியக்கட்சியுடன் சேர்ந்திருக்கும் போது தனிச்சிங்களச் சட்டத்தின் அடிப்படையை ஏற்றுக்கொண்ட கட்சி, பொதுத்துறை மந்திரியிடம் சிங்களத் தேர்தலில் சித்தியெய்யாத தமிழ் ஊழியர்களுக்குக் கருணை காட்டுப்படி கூறும் கட்சி அதேவேளையில் பாடசாலைப் பிள்ளைகளைமட்டும் - அதாவது வருங்காலத்தில் அரசாங்க உத்தியோகங்களை நம்பியிருக்கும் பெரும்பகுதியினரை-சிங்களம் படிக்காதீர்கள் என்று தடுப்பது எந்தவகையான தர்க்க நியாயத்தைச் சேர்ந்தது? வயதுபோன திரு. செல்வநாயகம் அவர்களின் மூளையும் குழம்பி

இவற்றைப் பார்க்கும்பொழுது தமிழரசுக்கட்சியின் கொள்கைக் குழம்பலுக்கும் கோளாறுக்கும் அதன் தலைவர்களின முதலாளித்துவ மேல்வர்க்கமனப்பான்மையே காரணமாக இருக்கிறது என்றும் சொல்லலாம். நெற்காணி மசோதாமுதல் பஸ்தேசியமயம், அந்நியததளங்களைப் பொறுப்பேற்றல் ஆகியவைவரை தமிழரசுக்கட்சி எதிர்த்துவந்ததிற்கு அதுவே பெரிதும் காரணமாக இருக்கவேண்டும். அதை மறைக்க அது "தமிழ்"ப் பூச்சுப் பூசுகிறது.

1965 முதல் 1970 வரையும் விதேசக் கொள்கைகளை ஆதரித்துக்கொண்டு வந்த முதலாளித்துவ யூ. என். பி. யுடன் பல இரகசிய ஒப்பந்தங்களுளுடன் நட்புறவு பூண்டு கூட்டுச்சேர்ந்திருந்த காலத்தில் தமிழரசுக்கட்சி "போராட்டம்" எதையும் நடத்த விரும்பியதில்லை. சிங்களம் படிக்காத தமிழ்

தொடர்ச்சி 2ம் பக்கம்

கிருத யுகத்தைக் கேடின்றி நிறுத்த
விரதம் நான் கொண்டனன்.

— பாரதி

# சத்தியநோக்கு

## எமது இலட்சியம்

**ஒரு சிறு இயக்கமும் வீணாகப்போகாது. இறுதியில் எந்த ஒரு முயற்சியும் வெல்லாமல் போகாது. செயலைவிடக் கனவு சிறிதாகவே இருக்கும்.**

— *சகோதரி நிவேதிதா*

இது சத்தியம் பத்திரிகையின் புதிய பதிப்புக்குரிய மூன்றாவது இதழ். வெற்றிகரமாக மாதமிருமுறை வெளியிடலாம் என்ற நமது நம்பிக்கை வலுவடைந்து வருகிறது. காலப்போக்கில் பத்திரிகையின் பக்கங்களைக் கூட்டி வாரப்பத்திரிகையாகவும் வெளியிடவேண்டும் என்ற திட்டமும் இருக்கிறது. நல்ல நோக்கங்கள் வெல்லத்தொடங்கியுள்ள காலம் இது. எந்த ஒரு குறுகிய சுயநலநோக்கமும் இல்லாது பொதுநனமைக்காகத் திறமையையும் சொத்தையும் அர்ப்பணிக்கும் கர்மயோக முயற்சியாகவே நாம் இப்பத்திரிகையின வெளியீட்டைக் கணிக்கிறோம்.

தரமற்ற தென்னிந்தியத் தமிழ்ச்சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் திரைப்படங்களையும் தடைசெய்யவேண்டுமென்ற இயக்கத்திற்குப் பூரண ஆதரவு கொடுக்கும் நாம் அதேவேளையில் சாதாரண தமிழ்மக்களுக்குத் தரமான கலை இலக்கியங்கள் எப்படிப் பட்டவையாய் இருக்கும் என்பதைத் தெரிவிக்கவேண்டும் என்பதையும் நமது கடமையாகக் கருதுகிறோம். அதனால் நமது பத்திரிகை சாதாரணப் புதினத்தாளாக வெளிவராது. தரமான கலை இலக்கியங்களையும் சாதாரண பொதுமக்களுக்கு அறிமுகப் படுத்தும் ஓர் சாதனமாகவே இருக்கும்.

கலை இலக்கிய விழிப்பு, சமூக பொருளாதார அரசியல் அமைப்பை முற்போக்காக மாற்றியமைப்பதற்கு வழிவகுக்க வேண்டும் என்று கருதுபவர்கள் நாம். அதனால் சத்தியம் பத்திரிகையின் கலைச்சேவை சமூக பொருளாதார அரசியல் மாற்றத்தைக் கருத்தில்கொண்டதாகவே இருக்கும்.

சமூக பொருளாதார அரசியல் மாற்றம் ஆத்மீகப்புரட்சியாகவும் எழுச்சியாகவும் வளர்க்கப்படாவிட்டால் பூரணத்துவம் அடையாது. அதனால் எந்த அரசியல் கட்சிக்கும் இல்லாத ஆத்மவேட்கை நமது இயக்கத்தின் முக்கிய அம்சமாக இருக்கிறது. ஆனால் அதற்காக எந்த ஒரு தனிப்பட்ட சமயத்துக்கும் நாம் "வக்கலாத்து" வாங்கப்போவதில்லை. தனிப்பட்ட சமயவெறியையும், சமய ஆதிக்கத்தையும் அழிப்பதே நமது தொண்டாக இருக்கும். எல்லாம் ஒன்றாக இணையும் முழுமதமே நாம் ஏற்கும் சமயமாக இருக்கும். அதற்குரிய தீவிர சமயப் புரட்சியும் அது பிறப்பிக்கும் புதிய விஞ்ஞான-சமயஞான மறுமலர்ச்சியுமே மனிதனின் அடுத்தகட்டப் பரிணாமத்துக்குரிய தளமாக இருக்கும். "சத்தியம்" அத்தகைய மாற்றத்தை நோக்கி தமிழ்மக்களின் மனதைத் தயார்ப்படுத்தமுயலும்.

தமிழ்ப்பகுதிகளிலுள்ள "தமிழ்க் கட்சிகளை" முற்றாக அழித்தொழிப்பது நமது முக்கிய இலட்சியங்களில் ஒன்றாக இருக்கும். அதைப் பச்சையாகவே சொல்ல விரும்புகிறோம். ஈழத்தமிழனைப் பிடித்துள்ள சாபக்கேடு அவைதான். ஆனால் அவற்றை அழிப்பதற்காக நாம் ஆதரிக்கும் முற்போக்குக் கட்சிகளும் நமது இலட்சியங்களுக்குரிய பூரண சாதனங்களல்ல என்பதையும் நாம் மறந்துவிடத் தயாராய் இல்லை. அதனால் அவற்றோடு நாம் சேர்வது அவற்றை உள்ளிருந்து மாற்றி நமது தேசத்துக்கும் சர்வதேசங்களுக்கும் உரிய ஒரு சத்திய அரசியல் இயக்கத்தை ஆரம்பிப்பதற்காகவே என்பதையும் வாசகருக்குத் தெரிவிக்க விரும்புகிறோம்.

சத்தியம் நிறுவனம் ஒரு பூரண சர்வோதய சோஸலிஸ நிறுவனமாக அமைக்கப்படவிருக்கிறது. வெகுவிரைவில் பெருமளவு முதலீடு செய்து ஆரம்பிக்கப்படவிருக்கும் நமது நிறுவனத்திலிருந்து பெறக்கூடிய ஆதாயம் முழுவதும் பொதுச்சேவைக்குரிய பொதுச் சொத்தாகவே பயன்படுத்தப்படும்.

# யார் அவதார புருஷர்?

— ந. கோ. கி. —

அவதார புருஷர் என்றால் யார்? அவர்கள் எப்படிப்பட்டவர்கள்? கலிமுற்றிய இக்காலத்தில் இதுபோன்ற கேள்விகள் அநாகரிகமாகப் படலாம். அல்லது ஏளனத்துக்கு இலக்காகலாம். 'கடவுளே உருவெடுத்த அவதார புருஷர்கள் இக்காலத்தில் இருக்கிறார்களா?' அல்லது எந்தக் காலத்திலாவது இருந்ததுண்டா? அப்படி இருந்ததாகக்கூறும் சமயக் கருத்துக்களெல்லாம் கட்டுக்கதைகளல்லவா?' என்று எதிர்க்கேள்விகள் போடுவோர்தான் இன்று அதிகம். ஆனால் அதற்காக உண்மை மறைந்துவிடுமா? அல்லது அவதார புருஷர்கள்தான் பிறக்காமல் போய்விடுகிறார்களா? இல்லை, அவர்கள் எக்காலத்திலும் அக்காலத்தின் நிலைகளோடு ஒட்டிப் பிறந்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

அவனிதனில் அவதரிக்கும் அவதார புருஷர்கள் அவ்வக்காலத்து அடையப் படுகின்ற போகங்களிலே விருப்பு வெறுப்பற்று இருப்பார்கள். மகிழ்ச்சி விசனம், அச்சம், கோபம், ஆசை, ஆகிய வற்றால் அவர்கள் கலங்கார்கள். அகங்கார வடிவமாகவுள்ள வாசனையை நீக்கி, சொரூபகரமாகவே நிலைத்திருப்பார்கள். அவர்கள் மாசில்லா தூயமனம் உடையவர்கள். உண்மையை நோக்கி எதிலும் அபிமானம் அற்றிருப்பார்கள். எதனையும் அளவுக்கு மிஞ்சி விரும்பார்கள். மாயாகாரியமாகிய நாமரூபங்களை விலக்கி எவற்றையும் சச்சிதானந்த சொரூபமாகக் காணபார்கள். விருப்பு, வெறுப்பு சுகதுக்கம் பலாபலன் என்னுமிவை ஏற்படுமிடத்து நடுநிலை நிற்பார்கள். உலகோர்க்கு உபகாரமாகச் செய்ய வேண்டியவற்றைச் செவ்வனே செய்வார்கள். கருமஞ் செய்யுமிடத்து அகங்காரம், அபிமானம் பொறாமை மனக்கலக்கம் ஆகிய எவையுமற்று மௌனமாகச் செய்வார்கள். ஆடம்பரப் பொருட்களில் அபிமானம் கொள்ளார்கள். வயோதிபம், மரணம், ஆபத்து, வறுமை எனும் இவைகளிலும் சமநோக்கை வரித்து அனுபவிப்பார்கள். மரணத்தை மனமகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள். ஓடும் புளியம் பழமும் போல உலகத்தோடு ஒட்டியும் ஒட்டாமலும் வாழ்வார்கள். அவர்கள் இல்லறத்தில் இருப்பினும் இருப்பர், துறவறத்தில் இருப்பினும் இருப்பர். அவர்கள் சென்றது கருதார்கள் நாளைச் சேர்வதை நினையார்கள். கண்முன் நின்றது புசிப்பர். நன்றிது தீதிது என்று ஒன்றையும் குறிப்பிட்டுக் கூறார்.

அவர்கள் எத்தொழிலும் செய்வார். வணிகராயிருப்பர். அரசனாயிருப்பர். மௌனியாய் இருப்பர். ஆண்டியாய்த் திரிவர். அருந்தவம் உஞற்றுபவராய் இருப்பர். அவர் பெருமையை இத்துணைத்தென்று எடுத்துக்கூற எம்மால் இயலாது. என்றும் இவர்கள் ஜீவன்முக்தர்கள். வாழ்வியலை உண்மையாக ஓர்ந்துணர்ந்தோர் இவர்களே.

அவதார புருஷர்களுக்கு இவற்றோடு முப்பத்திரண்டு இலட்சணங்களும் உண்டு. கைகளில் திரிசூலம், சங்கு, குடை, தாமரை, மச்சம் போன்ற இன்னோரன்ன குறிகள் உண்டு என்று கூறுகிறது, சிவப்பிரகாசத்திரட்டு.

1ம் பக்கத் தொடர்ச்சி

## தமிழரசுக் கட்சியும்

உத்தியோகத்தர்கள் பிரச்சனையைப் பற்றி அதிகம் கவலைப்படாது கைவிரித்தது. அடையாள அட்டை மசோதாவுக்கும் விட்டுக்கொடுத்து ஆதரவளித்தது. சிறிமா - சாஸ்திரி ஒப்பந்த அமுலுக்கும் ஆதரவளித்தது. பஸ் தேசியமயத்தாலும் மக்கள் வங்கியாலும் நெற்காணிச் சட்டத்தாலும் தமிழர்களுக்கு ஆபத்துவந்தது என்று கருதிய அதே தமிழரசுக்கட்சி அடையாள அட்டை மசோதாவாலும் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்த அமுலாலும் தமிழர்களுக்கு ஆபத்து ஏற்படவில்லை என்று எவ்வாறு கருதிற்றோ தெரியாது. அதற்குரிய ஒரே ஒரு காரணமாக தமிழரசுக்கட்சியின் முதலாளித்துவப் போக்கைத்தான் காட்டலாம். தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் ஆதரவளிக்கும் இடதுசாரிக் கட்சிகள் கொண்டுவரும் எல்லா முற்போக்கு விசயங்களையும் எதிர்ப்பதும் முதலாளித்துவ யூ. என். பி. கட்சி கொண்டுவரும் தமிழர்களுக்குப் பாதகமான சட்டங்களையுங்கூட ஆதரிப்பதுமே தமிழரசுக்கட்சியின் கொள்கையாக இருக்கிறது. அதனால்தான் சென்ற ஐந்து வருடங்களாக நிபந்தனையற்று யூ. என். பி. கட்சியின் தேசிய அரசாங்கத்துக்கு ஆதரவளித்துவிட்டு இன்று தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் சார்பான ஐக்கிய முன்னணி அரசாங்கம் வந்தபின் போராட்டம் என்றும் பொங்குதமிழ் எழுச்சிவிழா என்றும் ஆரம்பித்திருக்கிறது. எனவே தமிழரசுக்கட்சியின் தமிழ்ப்பற்றைவிட அதன் முதலாளித்துவப்பற்றே அதன் "தமிழ்க்கொள்கை"யின் குழப்பங்களுக்கும் கோளாறுகளுக்கும் காரணமாகவிருக்கிறது.

---

இவை பலருக்கு வெறும் பகற்கனவுகளாகப்படலாம். ஆனால் சகோதரி நிவேதிதா கூறியதுபோல் நமது கனவுகளைவிடச் செயல்கள் பெரிதாக இருக்கும் காலம் வந்துவிட்டது என்று நாம் கருதுகிறோம். இடிபட்ட சுவர்போலக் கலி வீழ, கிருதயுகம் எழுகமாதோ என்று பாரதி ருஸ்ஸியப்புரட்சியைப் பற்றிப் பாடினானே, அந்தக் கிருதயுகப் புரட்சியும் எழுச்சியும் ஆத்மீகத்தளத்தில் அகிலமெங்கும் கேடின்றி நிறுவப்படும் செயல் செறிந்த காலம் வந்துவிட்டது. அதற்காக வாழ்க்கையையே தானம் செய்துள்ள நாம் சில பழைய சர்வோதயவாதிகள் கருதுவதுபோல் வரவிருக்கும் புரட்சியையும் சத்திய எழுச்சியையும் வெறும் "சைவ - மரக்கறி - அகிம்சை" இயக்கமாகக் காண்பதில்லை. குருஷேத்திரத்தில் அர்ச்சுனன் நடத்திய போராட்டத்தையும் அகிம்சைப் போராட்டமாகவே கருதும் நாம் தவிர்க்கமுடியாது வரும் ஆயுதமேந்திய சத்தியப் போராட்டத்துக்கும் இடம் விட்டே செயல்பட விரும்புகிறோம்.

புதுயுகப் புரட்சியின் அடுத்த அலை நம்முடையதாவே இருக்கும்.

## நான் காணும் குரு

என் குருவே என் தந்தை. பாதுகாப்பளிப்பவரும் அசைக்கமுடியாத பாறை போல் நிலை தளராதவரும் நீதியானவரும் அவரே. அவரது பலத்தில் என் மனம் நிலை குலையாது நிற்கின்றது.

என் குருவே என் அன்னை. எவ்வளவுதான் என் பலவீனங்களில் நான் திளைத்து மகிழ்ந்தாலும், எப்படித்தான் என் குறைகள் இருந்தாலும் என்னை வெறுத்தொதுக்காது என் குறைகளை மறைத்தவாறே என்னில் அன்புகாட்டும் அன்னை அவரே.

என் குருவே என் குழந்தை. குறும்பின் சாறாய், கீழ்ப்படியாக் குழப்படிப் பிள்ளையாய் சதா என் கண்களிலிருந்து தப்ப முயலும் குழந்தை;

என் குருவே என் மகன். கட்டழகுத் தோற்றம்; பயமற்ற மனம் சரியெனத் தனக்குத் தெரிபவற்றுக்காகத் தரணியையே தனியாக எதிர்க்கக்கூடிய தைரியவான்;

என் குருவே என் மகள். கற்பின் சின்னம். அடக்கமானவள், கடமையே கண்ணானவள்.

என் குருவே என் நற்குணங்கள் எல்லாவற்றினதும் நண்பன். என் தீயகுணங்கள் எல்லாவற்றினதும் எதிரியும் அவனே.

அறிவுக்கடலாய் என் குரு இருக்கின்றார். தன் கைவல்ய நிலையை நான் அடையும்வண்ணம் தளராப் பொறுமையுடன் என் மனதைப் பயிற்றுகிறார்.

என் குருவே மூவுலகங்களினதும் பெரியோன். ஆக்குபவனும், காப்பவனும், அழிப்பவனும், வரங்களை அருளுபவனும் அவனே, முக்தியின் ஆனந்தத்தை அனுபவிக்கச் செய்வதற்காக என் மனதை அவன் மாயைக்குள் ஆழ்த்தினான்.

என் குருவே முழுப் பிரபஞ்சமாக இருக்கிறான், அதற்கப்பாற்பட்டு இருப்பவனும் அவனே. அவன் என் மனதுக்குள் நிறைந்திருக்கிறான்; மனதைக் கடந்திருக்கிறான்.

அவன் எப்பொருளுமல்லன். ஒவ்வொரு பொருளும் அவனே;

அநேகனாக என் குருவே இருக்கின்றான்; ஏகமாக இருப்பதும் அவனே; தடுமாறிய மனங்களில் அவன் தன் அருளைச் சொரிவானாக!

— அன்னை

வடமாகாண மக்களுக்கோர் வரப்பிரசாதம்

**புத்துணர்வூட்டும் குளிர்பான வகைகள்**

ஓரஞ்பார்லி ★ பைன்ஆபபிள்
முக்கனிச்சாறு ★ விநேகிரஷ்
பஞ்சாமிர்தம் ★ ஐஸ்கிறீம்

தயாரிப்பாளர்கள்:

**சீதா சோடா தொழிற்சாலை**

291, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(டெலிவரி உண்டு)

"பொங்குதமிழ்" தம்பிக்கு

# எட்டப்பன் எழுதும் கடிதம்

தம்பி,

நான் அனுப்பிய "சத்தியம்" இதழ்களைப் படித்துவிட்டு நீ ஆத்திரப்பட்டு எழுதியிருக்கிறாய். உன்னுடைய பார்வையில் நாம் ''சிங்களவர்களுக்குத் தமிழினத்தைக் காட்டிக் கொடுப்பவர்கள், விற்பவர்கள்...... எட்டப்பன் கூட்டம் அப்படித்தானே? நான் அதை எதிர்பார்த்திருந்தேன். உனக்கும் உனது கட்சியைசசேர்ந்த ''அண்ணா''மாருக்கும் ''தம்பி''மாருக்கும் அவற்றுக்கு அப்பால் போகத் தெரியாது என்பது எனக்குத்தெரியும். "சுதந்திரன்" பத்திரிகை திரிக்கும் சுலோகங்களையும் எழுதும் புரட்டுக்களையும் கிளிப்பிள்ளை போல் விழுங்கிவிட்டு ஒப்பிப்பவர்கள் நீங்கள்... தேர்தல் மேடைகளிலும் அப்படித்தானே உனது 'அண்ணா'மார் ஒப்பித்தார்கள்? இப்போ அவர்கள் நடத்திவரும் பொங்கு தமிழ் எழுச்சிவிழாக்களிலும் அப்படித்தானே பேசிவருகிறார்கள்?

சரி தம்பி, நான் தெரியாமல் கேட்கிறேன், நீங்கள் காட்டும் வழியென்ன அதைச் சொல்வீர்களா? திட்டினால் போதுமா, வழியையும் காட்டவேண்டாமா? உங்கள் வீரக் "கட்டப்பொம்மன் கூட்டம்' இருபது வருடங்களுக்கு மேலாக என்னத்தைக்காட்டி வருகிறது? நீ எஸ், எஸ். சி. பாஸ்பண்ணிவிட்டு கொழும்பில் ஏதோ ஒரு கடையில் நிற்கிறாய். சிங்களவர்கள் மோடர்கள், முட்டாள்கள் என்று சொல்லி அவர்களைச் சுரண்டி வந்த பழைய தமிழ் முதலாளிமார்களின் புதிய வாரிசு நீ. பழைய முதலாளிமாரின் தலைவீக்கம் உனக்கு இல்லை என்பது உண்மைதான். பட்டுக்கழித்தபின யார் முட்டாள்கள் என்பது இப்போ தெரியவந்துவிட்டது. அந்தத் தலைவீக்கம் உனக்கு இல்லை. ஆனால் அதற்குப்பதிலாக 'வீரம், 'தமிழரசு' 'சுயாட்சி' தமிழுணர்ச்சி என்றெல்லாம் சுலோகங்கள் பாடிவருகிறாய். அவையெல்லாம் உனக்கு இருப்பதாக நீ நடித்துக் கொள்கிறாய். பழைய முதலாளிமார் தங்களின் சுரண்டலை மறைக்க ஊரில் வந்து கோயில், குளங்களைக்கட்டினார்கள். நீங்களோ உங்கள் சுரண்டலை மட்டுமல்ல உங்கள் கோழைத்தனத்தையும் மறைக்க வீரச் சுலோகங்கள் பாடிவருகிறீர்கள் - ஊரில் வந்துதான், அங்குசிங்களவர்களின் பிரதேசங்களிலல்ல. அவ்வளவுந்தான் வித்தியாசம். பழைய தலைவீங்கிய முதலாளிமார்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும்சரி. புதிய வீர வாரிசுகளாகிய உங்களுக்கும்சரி சிங்கள நாட்டுப் பணமில்லாவிட்டால் ஒன்றும் செய்யமுடியாது. அவர்கள் கட்டிய கோயில், குளங்களுக்கும் வாங்கிய கார்- பங்களாக்களுக்கும் நீங்கள் பார்க்கிற எம். ஜீ. ஆர். படங்களுக்கும் வாங்கிப்படிக்கிற ''பொம்மை''களுக்கும் அணிந்து கொள்ளும் நைலோன் சேர்ட்டுக்கும் வெள்ளை வேட்டிக்கும் சிங்களநாட்டுப் பணமும் வளமுந்தான் காரணம் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ள மறுத்தாலும் உண்மை அதுதான். உங்கள் உழைப்பும் படிப்பும் சேர்ந்துதான் அவை உருவாகின என்று நீங்கள் சாட்டுக் காட்டலாம். ஆனால் உண்மையில் உங்கள் உழைப்பும் படிப்பும் வெறும் சுயநலச் சுரண்டல்தான். பொதுநன்மையைக் கருதிய உழைப்பல்ல. சேவையல்ல. நீங்கள் டொக்டருக்கும் என்ஜினியருக்கும் படிப்பது லட்சக்கணக்காக சீதனம் வாங்கிக் கல்யாணம் முடிக்கவும் நாட்டின் நன்மையைப்பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாது துரைத்தன வாழ்க்கை நடத்துவதற்குந்தான். நீங்கள் கடைவைப்பது, மற்றவர்களின் உழைப்பைச் சுரண்டி, மற்றவர்களின் வளத்தைச் சுரண்டி உங்கள் பிரதேசங்களின் வளத்தையும் பலவீனப்படுத்தும் ஒரு கோழைத்தன வாழ்க்கை முறையை வளர்ப்பதற்குத்தான். "யாழ்ப்பாணக் கலாசாரம்" "சைவமரபு" தமிழ்ப்பற்று என்றெல்லாம் நீங்கள் நாமஞ்சூட்டி அழைப்பது அந்தக் கோழைத்தன கடைக்கார-உத்தியோக-சீதன வாழ்க்கை முறையைத்தான். இன்னுங்கொஞ்சக்காலத்தில் பதினையாயிரமோ இருபத்தையாயிரமோ சீதனம் வாங்கி நீயும் கல்யாணம் செய்துகொள்ளப்போகிறாய். பாவம், யாரோ ஒரு "புத்திசாலி" மாப்பிள்ளையான உனக்குச் சீதனமாகத் தருவதற்தாக சேமித்துக்கொண்டிருக்கிறார். நீயும் அதை வாங்கி அவரைப்போலவே உண்ணுமல் கொள்ளாமல் இன்னேர் புத்திசாலி மாப்பிள்ளையைப் பார்த்துக் கொடுப்பாய். இதுதான் தம்பி, நீங்கள் காட்டும் "கட்டப்பொமமன்" வாழ்க்கை வரலாறு! இதுதான் உன் "கட்டப்பொம்மன்" பரம்பரையின் சரித்திரம்! இதில் வீரமும் தமிழுணர்ச்சியும இருப்பதாக நீ சொல்லிக்கொள்கிறாய் ஆனால் எனக்கு அப்படியொன்றும் அதில் தெரிவதாய் இல்லை. படு ஒட்டுண்ணிச் சோதாக்கும்பலின போலி வீரமரியாதைப் பூச்சுத்தான் தெரிகிறது.

ஓ, இது "பிஸ்னஸ்" என்கிறாயாக்கும்? அரசியல் வேறு, பிஸ்னஸ் - உத்தியோகம் வேறு என்கிறாயாக்கும? உன "கட்டப்பொம்மன்" அரசியல் கட்சிகளினதும் தலைவர்களினதும் வாழ்க்கையிலும் போராட்டங்களிலும் வீரம் இருக்கிறது என்கிறாயாக்கும். அப்படித்தானே ?

அப்படி நீ நினைக்கின்றாய். அவர்களும் சொல்லிக்கொள்கிறார்கள். உன்னை ஏமாற்றுகிறார்கள். அவர்களது அரசியல் வாழ்க்கையிலும் எனக்கு நீ நடத்தும் "பிஸ்னஸ்"தான் தெரிகிறது. அரசியலோ, வீரமோ தெரிவதாய் இல்லை. "தமிழுணர்ச்சி" "வீரம்" "தமிழரசு" "தமிழ்" என்ற சுலோகங்களை மூலதனமாக வைத்து இருபது வருடங்களுக்கு மேலாக அவர்களும் பிஸ்னஸ்தான் நடத்திவருகிறார்கள் - "சுதந்திரன்" பத்திரிகை நடத்திவரும் பிஸ்னஸ்ஸைப் போல!

உனக்கோ எனக்கோ அவர்களால் எந்தவிதப்பயனும் ஏற்பட்டிருக்கிறதா? உண்மையில் ஆராய்ந்து பார்த்தால் பாரிய நட்டந்தான் நம் பரம்பரைக்கே அவர்களால் ஏற்பட்டிருக்கிறது என்பது தெரியவரும். அவர்கள் தங்களை ஏமாற்றி வருகிறார்களோ என்னவோ தெரியாது. ஆனால் நிச்சயமாக உன்னைப்போன்ற தமிழர்களை ஏமாற்றித்தான் வாழ்கிறார்கள். உன்னைச் சிங்களம் படிக்கவேண்டாம் என்பவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குச் சிங்களம் படிப்பிக்கிறார்கள்! உத்தியோகத்தையும் துறந்து போராடும்படி மற்றவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பவர்கள் தள்ளாத வயதிலும் எம். பி. பதவியைக் கட்டிக்காக்கவே விரும்புகிறார்கள்! போராட்டம், மறியல் என்று பிரச்சாரம் செய்து பணம் திரட்டுபவர் ஆபத்துநேரத்தில் சிறைச்சாலையே பூஞ்சோலை என்று அடைக்கலம் புகுபவர்களாய் அதற்குள்ளேயே ஒளித்துக் கொண்டு போராட்டத்தைக் கைவிட்டு விடுவார்கள்! இந்தவகையான வெற்றுவேட்டு அரசியலிலும் போராட்டத்திலும், இப்போ அவர்கள் நடத்திவரும் பொங்கு தமிழ் எழுச்சி விழாக்களிலும் கோழைத்தன ஏமாற்று பிஸ்னஸ்தான் தெரிகிறதேயொழிய வீரமும் தெரியவில்லை, உண்மையான தமிழறிவும் உணர்ச்சியும் தெரியவில்லை. உழைக்கவேண்டும், பெரியாளாகவேண்டும், பெரிதாகச் சீதனம் வாங்கி கலியாணம் முடிக்கவேண்டும் என்று நீ எப்படி விரும்புகிறாயோ, அந்த விருப்பங்களை மறைத்துக் கொண்டு, அவற்றுக்கு ஆபத்து வராமலேயே "போராட்டம்" "அரசியல்"

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# கேள்வி - பதில்

சத்தியன் பதில் தருகிறார்

கேள்வி:

1. யு. என். பி. அரசாங்கத்தின் போது தமிழ்க் கடிதங்களுக்கு பதில் சிங்களததில் எழுதப்பட்டிருந்தாலும் தமிழ் மொழிபெயர்ப்பும் சேர்க்கப்பட்டிருந்தது. ஆனால் இப்போ மக்கள் முன்னணி அரசாங்கத்தில் தனிச்சிங்களத்தில் மட்டுமே பதில் வருகிறது. இதுதான் சோஸலிசமா?
2. இறக்குமதியாளரை முன்பு இலங்கையர் இலங்கையல்லாதோர் என்ற அடிப்படையில் பார்த்தது முன்னைய அரசாங்கம். ஆனால் இப்போ, இலங்கையருள் தமிழர் சிங்களவர் என்று பிரித்துப் பாகுபாடு காட்டுகிறதே இன்றைய அரசாங்கம்?
3. தமிழ்ப்பிரதேச நீதிமன்றங்களில் சிங்களம் புகுத்தப்படப் போகிறதே?
4. எதிர்வீரசிங்கத்தின் பின் தமிழர்கள் விளையாட்டுத்துறையில் ஒதுக்கப்பட்டு வருவது ஏன்?
5. கொழும்பு தொழில் நுட்பக் கல்லூரியில் இதுகாலவரை ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் வகுப்புகள் நடைபெற்றன. இப்போது தனிச் சிங்களத்தில் மட்டுமே நடைபெறுவது ஏன்?

— 'ஜெகா' கொழும்பு —

பதில்:

இக்கேள்விகள் ஐந்தையும் ஒருவரே கேட்டுள்ளார்.

இக் கேள்விகள் ஐந்துக்கும் தனித்தனியாகப் பதில் தராமல் பொதுப்படையாகப் பதில் தருவதே சிறந்தது. ஏனெனில் ஐந்தும் வெவ்வேறு கேள்விகளாக இருந்தபோதிலும் ஒன்றையே அழுத்துகின்றன. அதாவது இன்றுள்ள அரசாங்கம் தமிழனின் உரிமைகளை ஒவ்வொன்றாகப் பறிக்கிறது என்பதே அது. இப்படிக் சொல்லும்போது முன்னைய யு. என். பி. அரசாங்கம் இன்றுள்ள அரசாங்கத்தை விடச் சிறந்தது என்ற பொருளும் பெறப்படுகிறது.

இவை உண்மைதானா?
இவற்றை நாம் உணர்ச்சிக்கிடமற்று தர்க்க ரீதியாக ஆராயவேண்டும்.

யு. என். பி. எப்படிப்பட்டது? மேல்வர்க்க நலன்களைப் பாதுகாக்கும் ஓர் கட்சி. அதனால் அது பொதுமக்களை அதிகம் தொடாதது. பலம் அற்றது. அதனால் அதற்கு அரசாங்கம் அமைக்கத் தமிழரசுக் கட்சியின் உதவி தேவைப்பட்டது. அதன் பயனாய் தமிழர் பெற்றவையோ அன்பர் மேலே குறிப்பிட்ட வெற்றுச் சலுகைகளே. இவற்றைவிட தமிழருக்கு நன்மைசெய்ய வேண்டும், என்பது யு. என். பியின் கொள்கைத் திட்டமுமன்று. தமிழருக்கு நன்மை செய்யக் கூடிய பக்கபலமோ தைரியமோ விருப்பமோ யு. என். பிக்கு என்றும் இருந்ததில்லை. இவ்வாண்டு புதுப்பாராளுமன்றம் திறக்கப்பட்டபோது, சிங்களச் சட்டத்தை உண்மையாக அமுல் நடத்தியோர் தாம்தான் என்று மார்தட்டிய ஜே. ஆர். ஜயவர்த்தனவை யாரும் மறந்திருக்க முடியாது. அத்தோடு மொழிப்பிரச்சனை சாதிப்பிரச்சனை போன்றவற்றை யு. என். பி. வளர்க்கவே விரும்புகிறது. 58 இனக்கலவரங்களுக்குக்கூட அதுவே மறைமுகமாநின்று தூண்டியிருக்கிறது. காரணம் பொதுமக்களை இத்தகைய பிரச்சனைகளில் மூழ்கடிப்பதன மூலமே முதலாளித்துவமும் அதன் சுரண்டலும் நீடிக்க முடியும். இது வரலாற்று உண்மை. ஆகவே தமிழருக்கு யு. என். பி. எந்தவித சலுகைகளைச் செய்தபோதும் நாம் அதை ஆதரிக்கக் கூடாது. காரணம், அது சார்ந்து இயங்கும் முதலாளித்துவ அமைப்பு காலததுக்கு முரணானது, எந்தப் பிரச்சனைகளுக்கும் விடிவளிக்க முடியாதது.

அடுத்ததாக, இன்று ஆட்சி நடத்தும் மக்கள் முன்னணி அரசாங்கத்தை எடுத்துக் கொள்வோம். அதற்குள்ளும் சில பிற்போக்குச் சக்திகள் இருந்தபோதும் அதுவோர் இடதுசாரி அரசாங்கம். சோஸலிசத்தை தனது கொள்கைத் திட்டமாகக் கொண்டுள்ளது. மக்கள் ஆதரவு பெற்றது. அதுதான் முக்கியம. யு. என். பியைப் போலல்லாமல் எதுவித தேவையோ நிர்ப்பந்தமோ அற்றிருந்தும் ஓர் தமிழருக்கு மந்திரிப் பதவியும் இன்னும் மூன்று தமிழருக்கு நிரந்தரக் காரியதரிசிப் பதவியும் வழங்கியுள்ளது. அத்தோடு ஆட்சிக்கு வந்த மறுகணமே தீண்டாமை ஒழிப்புச் சட்டங்களை கொண்டுவந்துள்ளது. இன்னும் அதே விதத்தில பல சோஸலிச சீர்திருததங்களை கொண்டுவரப் போகிறது. ஐந்து வருடத்துக்குள் பலவித மாற்றங்கள் ஏற்படலாம்.

இந்தக் கட்டத்தில், தமிழரின் உரிமைக்காக குரல் எழுப்பும் தமிழ் அரசியல் கட்சிகள் தமது பழைய உருவங்களையும் நாமங்களையும் குலைத்துவிட்டு எவ்வளவுதூரம் சோஸலிசத்துக்காகப் பாடுபடத் தயாராய் உள்ளன? தமிழருக்கு உண்மையில் விமோசனம் ஏற்படவேண்டுமானல் இன்றைய அரசாங்கம் காட்டும் சோஸலிசத்தைவிட முற்போக்கான சோஸலிச அமைப்பை தமிழ்ப் பகுதிகளில் நாம் உருவாக்க வேண்டும். அப்போதான் எமது போராட்டம் வெற்றிபெற வாய்ப்புண்டு. சோஸலிச அடிப்படையில் பெரும்பான்மை சிறுபான்மை என்பதே எழமுடியாது. இன்றைய அரசாங்கம் காட்டும் சோஸலிசத்தில் குறைகாண்பதற்கு அதைவிட முற்போக்குச் சோஸலிச ரீதியில் இயங்குவோருக்குத்தான் யோக்கியத்தை இருக்கிறது. அப்படி இயங்க விரும்புவோருக்கு இன்றைய அரசாங்கம் அமைந்திருக்கும் சோஸலிசமே நல்ல அடித்தளம். அதிலிருந்தே இவர்கள் தம் முற்போக்கு இயக்கத்தை கட்டி எழுப்ப வேண்டும். அப்படியில்லாமல் இவர்கள் அதை எதிர்த்தால் இவர்கள் எதிர்ப்பெல்லாம் பிற்போக்கு யு. என். பிக்கே உதவுவதாய் முடியும். அதை இவர்கள் உணரவேண்டும்.

இக்கேள்விகளைக் கேட்ட அன்பர் உட்பட, பெரும்பான்மையான தமிழர்கள் எல்லோரும் இன்று தம்மை 'தமிழன்' என்ற குறுகிய வட்டத்துக்குள் வைத்துச் சிந்திக்கிறார்களே ஒழிய 'இலங்கை

தொடர்ச்சி 4-ம் பக்கம்

ஈழத்திலிருந்து வெளிவரும் தரமான

இலக்கிய இதழ்கள்

மல்லிகை | தமிழமுதம்
மலர் | எழில்
ரோஜாப்பூ | வானவில்
நாவேந்தன் | இளம்பிறை

வாங்கிப் படியுங்கள்

# தமிழ்ப் படங்கள் தரங்குறைந்திருப்பது ஏன்?

## சிங்களப்பட இயக்குநர் லெஸ்டர் கூறும் காரணம்

'உலகிலேயே மிகவும் ஏமாற்றமளிப்பது(75 ஆண்டு சரித்திரமுள்ள)இந்தியச் சினிமாத்துறை தான்,தென்னிந்தியாவில் உருவாகும்சினிமாப்படங்களில்20 வீதம் மட்டுமே வர்த்தக ரீதியாகவாவதுவெற்றிபெறுகின்றன. உயர்ந்ததோர் கலைமரபைக் கொண்டது தென்னிந்தியா. தென்னிந்தியாவின் சங்கீதம் உலகிலேயே முதன்மையான ஒன்று: தென்னிந்தியரின் நடனம் உலகெங்குமுள்ளவர்களால் மிகவும் போற்றி ரசிக்கப்படுகிறது; தென்னிந்தியாவின் பண்டைக்காலச் சிறப்புகள் ஈடிணையற்றவை. இப்படியாக ஒரு உன்னதமானதும், ஆழமானதுமான கலைமரபை வளர்த்துவந்திருப்பவர்கள், சினிமாத்துறையிலே இத்துணை பின்தங்கி யிருப்பது ஏமாற்றமும் வேதனையுமளிப்பதாகும்' இவ்வாறு உணர்ச்சியுடன் கூறியவர், உலகம் பெருமைப்படும் நம் நாட்டுத் திரைப்பட இயக்குனரான லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் அவர்கள்

கலையம்சத்தில் வரண்ட தென்னிந்தியத் திரைப்படக்'கும்பலில்' என்பது சதவீதமானவை வர்த்தக ரீதியாகக்கூடப் படுதோல்வியையே காண்கின்றன வென்றால் எதற்காகத் தொடர்ந்தும் இதே பாணியில் திரைப்படங்கள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன? எல்லோர் மனதிலும் எழக்கூடிய இந்தக் கேள்விக்கு லெஸ்டர் விளக்கம் கூறினார். வழமைக்கு முரணான ஒரு திரைப்படத்தை எடுப்பதைவிட வர்த்தகரீதியானதோல்வியை விரும்பி ஏற்றுக் கொள்ளத் தென்னிந்தியத் திரைப்படத் துறையினர் தயாராக இருக்கின்றார்கள். நமது மரபின் 'மாற்றம்' அல்லது 'புரட்சி ஏற்படுவதை அவர்கள் அடியோடு வெறுக்கிறார்கள். அப்படியாக ஏற்படும் ஒரு திருப்பம் தமக்கே ஆபத்தாக முடியுமென்று படமுதலாளிகள் பயப்படுகின்றனர். பழய பட்டியல் முறைப்படங்களே பாதுகாப்பானவை என்ற நம்பிக்கையால் வழமை குலைந்து போகாத வகையில் தொடர்ந்தும் பழைய விதமானபடங்களை மாத்திரமே எடுத்க்து கொண்டிருக்கிறார்கள்.

நம் நாட்டில், சிங்களத் திரையுலகுக்கு பிரமிக்கத் தக்கதான ஒரு கலைத்துவ வேகத்தை அளித்தவர்களில் முதன்மையானவர்களில் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் அவர்கள். தமிழ்த் திரையுலகைப் போலவே, தரமற்ற, பட்டியல் முறைப் படங்களின் ஆதிக்கத்திற்குட்பட்ட சிங்களத்திரைத் துறையில் இவரது படங்கள் புத்தெழுச்சியூட்டும் புதுச்சுடர்களாக வேகத்துடன் எழுந்தன புதுடில்லியில் நடைபெற்ற அகில உலகத் திரைப்பட விழாவில் இவரது 'கம்பெரலியா' தங்கமயில் பரிசுபெற்றுப் பெருவெற்றியீட்டியபோது ஈழம் முழுவதுமே பெருமைப்பட்டது. இப்படியானஒருகௌரவத்தின் 'கால் தூசு' கூட இன்னும் ஒரு தமிழ்ப் படத்தின் மீது படவில்லை யென்பது வேதனைக்குரியது. கலரியிலிருந்து எழுகின்ற விசிலடிப்புகளையே எதிர்பார்த்துத் திரைப்படமெடுக்கும் தமிழ்த் திரைப்பட நெறியாளர்களிலிருந்து வேறுபட்டவர் லெஸ்டர். அவர் கூறினார்

.நான் பம்பாய்க்குச் சென்றிருந்தபோது அங்குள்ள ஒரு திரைப்படத் தயாரிப்பாளரைச் சந்தித்தேன். அப்பொழுது அவர், தாம் பன்னிரண்டு திரைப்படங்களை ஒரே நேரத்தில் எடுத்து வருவதாக என்னிடம் சொன்னார். இப்படிச் செய்தால் நல்ல படம் உருவாகுமா? இந்தப் பன்னிரண்டு படங்களுக்காகவும் 48 லட்சம் ரூபாய்களைச் செலவிடுகிறாராம். ஆனால் எனது 'கபெரலியா' போன்ற தன்மையுள்ள ஒரு படத்தைத் தாம் ஒருபொழுதுமே எடுக்கத் துணியமாட்டாராம். தரமற்ற படங்களைத் தயாரிக்க 48 லட்சம் ரூபாய்கள் செலவழிக்கும் ஒருவர் அதன் ஒரு மிகச்சிறு பகுதியையாவது குறைந்தது கலைத்தரமுள்ள ஒரு படத்திற்காவது செலவிடக் கூடாதா?

'தங்கள் திரைப்பட மரபில்மாறுதல் ஏற்படுவதை அனுமதிக்க இவர்கள் விரும்பவில்லை, என்று லெஸ்டர் அழுத்தமாகச் சொன்னார். ஏன், எமது இலங்கையிலும் கூட நான் ஒன்பது ஆண்டுகள் வரையில் நல்ல படம் எடுக்க முடியாத வாறு விலக்கப் பட்டேன். பட்டியல் முறைப்படங்கள் தங்களுக்குப் பாதுகாப்பென்று திரைத்துறை முதலாளிகள் கருதுகிறார்கள். என்றார் இவர்.

தென்னிந்தியத் திரையுலகைப் பொறுத்தவரை ஜெயகாந்தனின் முயற்சிகள் குறிப்பிடப்பட வேண்டியவை என்று அவர் கூறினார். 'உன்னைப்போல் ஒருவன் என்ற தமது படத்தை ஜெயகாந்தன் எனக்காகத் திரையிட்டுக் காட்டியதோடு தாமே என்னருகில் இருந்து விளக்கங்களும் தந்தார். அவரது முயற்சிகளுக்கு அங்குள்ள படவர்த்தகர்கள் பெரும் இடையூறுகளும்' தடைகளும் விளைத் ருக்கிறார்கள் என்பதை அறிந்து கொண்டேன், என்றார் லெஸ்டர்

லெஸ்டரின் முதலாவது திரைப்பட விழா 1665 -இல் சென்னையில் நடந்தது. அண்மையில் அவரது படங்கள் அமெரிக்காவில் 'நவீன கலைக்காட்சி நிலையத்தில்' திரையிடப் பட்டுப் பெரும் வரவேற்பைப் பெற்றன. இசிகாவோ, ஓசோ, ஆகியோருக்குப் பின்னர் இந்தக் கௌரவத்தைப் பெற்ற ஆசிரியர் இவரேயாவர். நன்றி: மல்லிகை

---

3-ம் பக்கத் தொடர்ச்சி

### கேள்வி - பதில்

யர்' என்று தம்மை விரித்துப் பார்த்ததில்லை. தென்னிலங்கையை தமது சுரண்டலுக்கும் சுயநலத்துக்குமுரிய களமாக நினைக்கிறார்களேயொழிய தமது தேசம் என்று வைத்துப்பார்த்ததில்லை. அதனால் சிங்களமக்களின் சந்தேகத்திற்கும் அவநம்பிக்கைக்கும் தமிழர் இலக்காவதில் ஆச்சரியமில்லை. இத்தகைய குறுகிய சிந்தனைகளிலிருந்து விடுபட்டு நிற்கும் தமிழர்களால் எத்தனையோ சாதனைகளைச் சாதிக்கலாம். தோழர் வ. பொன்னம்பலம் அண்மையில் பேராதனைக்குப் போனபோது சிங்கள மாணவர் அவருக்குக் காட்டிய வரவேற்பே இதற்குச் சான்று பகரலாம்.

எமது பார்வைக் குறுக்கமும் கொள்கை வக்கரிப்புந்தான் எல்லாவற்றையும் பாழடித்துக்கொண்டு நிற்கின்றன. உரிமைக் குரல் எழுப்பும் நம்மவரில் எத்தனைபேர் தம்மை இழக்கத் தயாராய் இருக்கிறார்கள்? இன்றைக்கே ஈழத்தமிழினம் தமது உடமைகளையும் சுயநலங்களையும் இழப்பதற்கும் உண்மை சோஸலிசத்துக்கும தயாரானால் நாளைக்கே நாம் நமது உரிமைகளுக்கு மட்டுமல்ல உலகமக்களின் உரிமைகளையும் பெற்றுத் தருவதற்குத் தலைமை தாங்கிவிடுவோம். இதற்கு எத்தனைபேர் தயார்? உழுத்துப்போன பிற்போக்குக் கொள்கைகளின் ஏக முதலாளியாகிய நாம் உரிமைக்குக் குரல் எழுப்புகிறோம். ஒன்றையும் இழக்கத்தயார் இல்லாமல் 'போராட்டம்' என்று பெட்டைக்குரல் எழுப்புகிறோம். சீ வெட்கம்! இவற்றிலிருந்து என்று விடுபெறுகிறோமோ அன்றுதான் நமக்கு உண்மையான விடுதலை.

---

3-ம் பக்கத் தொடர்ச்சி

### எட்டப்பன் எழுதும்

என்று ஊரில் வந்து நின்று ஊரிலுள்ள "பொங்குதமிழ்வீரர்"களோடு சோந்து நீயும் ஒத்துப் பாடிவிட்டுப் பேசாமல் எப்படிப் போய்விடுகிறாயோ அப்படித்தான் உன்னுடைய இந்தக் "கட்டப்பொம்மன்" அரசியல் "அண்ணா"மாரும் உனக்கேற்றவிதத்தில் போலிப்போராட்டம் நடத்துகிறார்கள். உன் பலவீனங்களையும் கோழைத்தனத்தையும் நல்லாகத் தெரிந்துகொண்டு (அவர்களுக்குத் தெரியும். ஏனெனில் அவர்களும் அதேவிதக் கோழைகள்தான்) அவற்றையே மூலதனமாக வைத்துக்கொண்டு உன்னைச் சுரண்டி ஏமாற்றுகிறார்கள் அவர்கள். "வீரம்" "தமிழ்" "எழுச்சிவிழா" என்று பூசிமறைத்து ஏமாற்றுகிறார்கள். நீ எப்படி கொழும்பில் அழுகிப்போன பேரீச்சம்பழத்தை இரண்டொரு நல்ல பழங்களால் மறைத்துத் தண்ணியும் பூசி விற்றுவருகிறாயோ அப்படித்தான் இவர்கள் தமிழையும வீரத்தையும் பூசி அரசியலில் பிஸ்னஸ் நடத்துகிறார்கள். இறுதியில் உனக்கும் திருப்தி, அவர்களுக்கும் திருப்தி. இரண்டுபேரும் பிஸ்னஸ்காரர்கள்தானே? ஆனால் இதுதான் கட்டப்பொம்மன் கதையென்றால் இதில் எனக்கு அர்த்தம் இருப்பதாகவும் தெரியவில்லை. நான் இதை நம்பவும் தயாராய் இல்லை. உதுதான் தமிழர்களை விற்றுவிடாமல் காப்பாற்றப் போகிற வாழ்க்கைமுறையும் போராட்டமும் என்று நீங்கள் சொன்னால் எனக்குச் சிரிப்பாகத்தான் வருகிறது. பாவம், பழைய சரித்திரக் கட்டப்பொம்மன். பிஸ்னஸ்கார வெள்ளைக்காரனை எதிர்த்த அந்தப் புரட்சிக்காரனின் பெயரையே உங்களது கடைக்கார - உத்தியோக - அரசியல் சுரண்டல் பிஸ்னஸுக்குரிய லேபலாகவும் டிரேட்மார்க்காகவும் மாற்றிப்போட்டீர்கள்! இந்தநிலையில் என்னை எட்டப்பன் என்று சொல்லிக் கொள்வது பரவாயில்லைப்போல்படுகிறது.

என்ன தம்பி கோபிக்கிறீயா? சீ, உதா கட்டப்பொம்மன் செய்யிறவேலை? நீ ஆத்திரப்பட்டுக் கோபிக்கவேண்டுமென்று நான் இதை எழுதவில்லை. தெளிவான சிந்தனையோடு நீ செயலாற்றவேண்டுமென்பதற்காகவே எழுதுகிறேன். தொடர்ந்து எழுதுவேன். பதில் எழுதாவிட்டாலும் தயவுசெய்து படிக்காமல் விட்டுவிடாதே. ஆமாம். திடீரென்று எனக்கொரு சந்தேகம் நீ உண்மையில் படிக்கிறீயா: அதாவது வாசிப்பதுண்டா? வேறு ஒன்றும் வேண்டாம், கடைசி தினகரனில் அண்மையில் வெளிவந்த வ. பொன்னம்பலத்தின் பேட்டியையாவது படித்தாயா? இல்லை, என்ன? ஆமாம், இந்த இலட்சணத்தில்தானா நீங்கள் தமிழ் சஞ்சிகைகளைப் பற்றியும் தற்கால இலக்கியத்தைப்பற்றியும் அபிப்பிராயம் கூறவந்துவிடுகிறீர்கள்? சரி, போகட்டும். அடுத்த முறை எழுதுகிறேன்.

---

ஆசிரியருக்கு கடிதம்

### தமிழில் இல்லை

ஐயா!

பாரிசில் நடைபெற்ற உலகத் தமிழ மகாநாட்டிற்குப் போய்வந்துள்ளார். திரு, கபாலதீன் அவர்கள். ஆனால் அவர் வேலைபார்க்கும் கொழும்பு பொதுசன வாசிகசாலையில் தமிழன் ஒருவன் அங்கத்தவனாகச் சேர்வதற்கு தமிழில் விண்ணப்பப் பத்திரம் இல்லை. ஆங்கில விண்ணப்பபத்திரத்தில் தமிழில் எழுதிக் கொடுத்தால் அதை ஏற்கமாட்டேன் என்கிறார்கள் அங்குள்ள அதிகாரிகள். கொழும்பில் பெருந்தொகையான தமிழ மக்கள் வசிக்கிறார்கள். ஏன் கொழும்பு மாநகரசபையில் தமிழ் அங்கத்தவர்கள் கூட அங்கத்தவம் வகிக்கிறார்கள இந் நிலையிலும்கூட தமிழன் ஒருவன் தமிழிலே விண்ணப்பம் எழுதிக்கொடுத்து அங்கத்தவனாகச் சேரமுடியாத நிலையில் ஊமையாய்ச் செவிடனாய்க் குருடனாய் மானங்கெட்டு வாழ்கிறான். இதே நிலைதான் தமிழன் பெருந்தொகையில வாழும் கொட்டாஞ்சேனையிலுள்ள வாசிகசாலையிலும். இதுமட்டுமல்ல இந்த வாசிகசாலைகளில் ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களைக் காண்பதே குதிரைக் கொம்பைக் காண்பதுபோலத்தான். ஈழத்துத் தமிழர்கள் இக்குறை நீக்க விழித்தெழமாட்டார்களா?

ரவீ, கொழும்பு

---

### முதலாவது வருட நினைவுகூரல்

எங்களால் மிகவும் நேசிக்கப்பட்டவரும், எங்கள் செல்வக் குழந்தையுமாகிய மேரி. சென். அன்னா அவர்களின் ஆத்மா சாந்தியடைந்த தினமாகிய புரட்டாதி மாதம் 23-ம் நாளை நாங்கள் நினைவு கூருகிறோம்.

இப்படிக்கு
திரு. ஆ. பிரான்சிஸ்சும்
அவர் பாரியாரும்.
மிருசுவில்

---

சத்தியத்திற்கு விஷயதானம்செய்வோருக்கு:
முகவரி:- ஆசிரியர்,
சத்தியம்
8/3 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பிரசுரம் யாழ்ப்பாணம் காங்கேசந்துறை வீதியிலுள்ள ஸ்ரீ லங்கா அச்சகத்தில் அச்சிடப்பெற்று சர்வ மத சங்கம் - சர்வோதய இயக்கத்தால் வெளியிடப்பட்டது.